A

**21733** **120 MINUTES**

1. கந்தபுராணம் எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது?
   A) ஹாலஸ்ய மாகாத்மியம், B) சிவசங்கர சங்கிதை,
   C) பாகவத புராணம், D) .பிருகத்கதா

2. ஒரு மாமரமும் கொஞ்சம் பறவைகளும் என்னும் சிறுகதையில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரத்தின் பெயர் என்ன?
   A) உலகநாதன் செட்டியாா B) கிருஷ்ணன் செட்டியார்
   C) கமலநாத செட்டியார் D) முருகானந்த செட்டியார்

3. காட்டு வாத்து என்னும் நூலின் ஆசிரியர் யார்?
   A) ந.பிச்சமூர்த்தி B) புதுமைப்பித்தன்
   C) இன்குலாப் D) இரகுநாதன்

4. பொருத்துக.
   a. சுந்தர முனிவர் - 1. தந்தை
   b. புருஷோத்தமன் - 2. ஞானத்தந்தை
   c. ஜீவகன் - 3. மந்திரி
   d. குடிலன் - 4. காதலன்

   A) a-2, b-4, c-1, d-3 B) a-2, b-1, c-4, d-3
   C) a-4, b-3, c-1, d-2 D) a-2, b-3, c-4, d-1

5. ஆராய்ந்தெழுதுக.
   1. உபநிடதங்கள் பண்டைய இந்தியத் தத்துவ நூல்களாகும்.
   2. வேதாந்தம் எனவும் இதனைக் கூறுவர்.
   3. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டவை.
   4. குரு – சீடன் இடையே நடக்கும் உரையாடல்களாகஅமைந்துள்ளன.

   A) 1, 2 சரி B) 2, 3 சரி
   C) 1,2, 3 சரி D) அனைத்தும் சரி

6. பின்வருவனவற்றுள் இராமாயணத்துடன் தொடர்புடைய பழமொழி எது?
   A) காக்கைக்குத் தன் குஞ்சும் பொன்குஞ்சு
   B) அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும்
   C) அணில் குஞ்சும் தன்னாலானது
   D) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

7. ‘ஔவை’ நாடகத்தின் ஆசிரியர் -------.
   A) இன்குலாப் B) இராஜம் கிருஷ்ணன்
   C) சிற்பி D) சுப்பிரபாரதி மணியன

8. பொருத்துக.

a. திராவிட கோயிற்கலை – 1. மீனாட்சி அம்மன் கோவில்
b. பல்லவர் கட்டிடக்கலை – 2. கஜீராஹோ
c. நாயக்கர் கட்டிடக்கலை – 3. தஞ்சை பெரியகோவில்
d. வடநாட்டு கட்டிடக்கலை – 4. மாமல்லபுரம்

A) a-2, b -1, c-3, d-4 B) a-3, b-4, c-1, d-2
C) a-2, b-3, c-1, d-4 D) a-4,b-1, c-2, d-3

9. கீதை அழுத்தமாக கூறுவது
A) மோட்சம், B) சுயதர்மம்,
C) துறவறம், D) இவையனைத்தும்

10. கேரளத்திலுள்ள ‘இரவிகுளம்’ சுற்றுலா மையத்தின் சிறப்பு
A) வரையாடுகள், B) சிங்கம் பாதுகாப்பு,
C) புலி பாதுகாப்பு D) பறவைகள் சரணாலயம்

11. காலவரிசைப்படுத்துக.
A) சங்க இலக்கியம், சிற்றிலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம்
B) சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம்
C) அற இலக்கியம், சங்க இலக்கியம், சிற்றிலக்கியம், பக்தி இலக்கியம்
D) சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், அற இலக்கியம்

12. படிமலர்ச்சிக் கருத்துகளுக்கு வித்திட்டவர்
A) அரிஸ்டாட்டில் B) சாக்ரட்டீஸ்
C) டார்வின் D) கலிலியோ

13. ஆராய்ந்தெழுதுக.
1. ஒற்றுச் செய்திகளை அனுப்பியவர்களை ‘கோபியோ நாவிசு’ என்பர்.
2. இதழியலின் தந்தை என்றறியப்படுபவர் ஜீலியஸ் சீசர்
3. தமிழ்நாட்டில் முதல் அச்சகம் தரங்கம்பாடியில் அமைக்கப்பட்டது.
4. கி.பி.1715 இல் முதல் கிறித்தவ வேதநூல் அச்சிடப்பட்டது.

A) 1,3சரி B) 2,3சரி
C) 1,2,3சரி D) அனைத்தும் சரி

14. ‘Avant grade’ என்பதன் தமிழ் வடிவம்
A) கவிதை இலக்கியம் B) நவீன இலக்கியம்
C) திறனாய்வு D) உரைநடை இலக்கியம்

15. சாபவிமோசனம்’ என்னும் சிறுகதையின் ஆசிரியர்
A) தி ஜானகிராமன் B) வல்லிக்கண்ணன்
C) புதுமைப்பித்தன் D) ஜெயகாந்தன்

16. திருக்குறளை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தவர்
A) பெஸ்கி பாதிரியார் B) உ.வே.சா
C) சகூர் D) ஜி.யு.போப்

17. “சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” – என்று பாடியவர்

A) பாரதியார் B) பாரதிதாசன் C) கவிமணி D) ஔவையார்

18. ஆராய்ந்தெழுதுக.

1. ஆய்வாளனுக்கு **தரவுகளைத் தேடுதலில்** நாட்டம் வேண்டும்.
2. நட்புக்கொள்ளுமுன் ஆராய்ச்சி வேண்டுமென்பார் திருவள்ளுவர்.
3. ஆராய்பவனைத் திவாகர நிகண்டு அறிஞன் எனக் குறிக்கின்றது.
4. பொருளடக்கப்பகுதியில் ஆய்வேட்டில் இடம்பெற்றிருக்கும் அனைத்துப் பொருள்களும் இடம்பெறத் தேவையில்லை.

A) 1,2சரி B) 2,3சரி C) 1,3,4சரி, D) 1,2,3 சரி

19. வரிசைப்படுத்துக.

A) தரவுகளைத் தொகுத்தல், பகுத்தாராய்தல், துணைநூற்பட்டியல், இயல்பிரித்தல்
B) பகுத்தாராய்தல், இயல்பிரித்தல், துணைநூற்பட்டியல், தரவுகளைத் தொகுத்தல்
C) பகுத்தாராய்தல், இயல்பிரித்தல், தரவுகளைத் தொகுத்தல், துணைநூற்பட்டியல்
D) தரவுகளைத் தொகுத்தல், பகுத்தாராய்தல், இயல்பிரித்தல், துணைநூற்பட்டியல்

20. ‘உரூபு’ என்னும் புனைப்பெயரில் அறியப்படும் மலையாள எழுத்தாளர்

A) பி.சி.குட்டிக்கிருஷ்ணன B) தகழி
C) நீலகண்டப்பிள்ளை D) பஷீர்

21. E-mail –ஐ கண்டுபிடித்தவர்

A) சிவா ஐயாத்துரை B) சுந்தர் பிச்சை
C) சாமி ஐயாத்துரை D) மீனாட்சி விஸ்வநாதன்

22. ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச்சங்கம் வைத்தும்’ என்று கூறுவது

A) அரிக்கமேடு கல்வெட்டு B) பெரிய திருமொழி
C) சின்னமனூர்ச் செப்பேடு D) சிலப்பதிகாரம்

23. பின்வரும் மொழிகளில் நடு திராவிடமொழி அல்லாதது எது?

A) தெலுங்கு B) நாயக்கி C) கோயா D) பாலி

24. ‘என்சரிதம்’ என்பது யாருடைய வாழ்க்கை வரலாறு?

A) உ.வே.சா B) வையாபுரிப்பிள்ளை
C) தமிழண்ணல் D) மறைமலையடிகள்

25. பத்திரிகைதான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப்பெரிய காவலாளி என்று கூறியவர் யார்?

A) ஜீலியஸ் சீசர் B) பாரதியார் C) லார்டு கிரே D) பாரதிதாசன்

26. சென்னையிலிருந்து வெளிவந்த இதழ்களைக் கால வரிசைப்படுத்துக.

A) சென்னை கெஜட், இந்தியன் ஹெரால்டு, சென்னை கூரியர், ஹார்காரு
B) இந்தியன் ஹெரால்டு, சென்னை கூரியர், ஹார்காரு, சென்னை கெஜட்
C) சென்னை கூரியர், ஹார்காரு, சென்னை கெஜட், இந்தியன் ஹெரால்டு
D) ஹார்காரு, சென்னை கெஜட், சென்னை கூரியர், இந்தியன் ஹெரால்டு

27. பூரிக்கோவால் தொகுக்கப்பட்ட எட்டுத்தொகை நூல்

A) குறுந்தொகை B) பதிற்றுப்பத்து
C) ஐங்குறு நூறு D) நற்றிணை

28. ஏ.பி.ஜே.அப்துல் கலாமுக்கு ‘அச்சமற்ற புதிய உலகத்தை’ அறிமுகப்படுத்தியவர் யார்?

A) ஜலாலுதீன் B) ஜமாலுதீன்

C) சம்ஸ்தீன் D) ஜைனுலாதீன்

29. ஆராய்ந்தெழுதுக.

1. பாலைக்குரிய பெரும்பொழுது நண்பகல்
2. மருதத்திற்குரிய சிறுபொழுது எற்பாடு
3. முல்லைக்குரிய பெரும்பொழுது கார்
4. குறிஞ்சிக்குரிய பெரும்பெழுது முன்பனி

A) 1, 2 சரி B) 1, 2, 3 சரி

C) 3, 4 சரி D) அனைத்தும் சரி

30. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் .............

A) முன்றுரை அரையனார் B) விளம்பி நாகனார்

C) கபிலர் D) நக்கீரர்

31. கீழ்க்காணும் பாடல் வரிகளை வரிசைப்படுத்துக.

1. வாயில் கடைமணி நடுநா நடுங்க
2. தேரா மன்னா செப்புவதுடையேன்
3. எள் அறு சிறப்பின் இமையவர் வியப்ப
4. புள் உறு புன்கண் தீர்த்தோன்

A) 2, 1, 3, 4 B) 4, 3, 2, 1 C) 2, 3, 4, 1 D) 1, 2, 3, 4

32. பொருத்துக.

a. குறிஞ்சி – 1. பரதவர்

b. முல்லை – 2. குறவர்

c. மருதம் – 3. ஆயர்

d .நெய்தல் – 4. உழவர்

A) a-2, b-3, c-4, d-1 B) a-4, b- 3,c-2, d-1

C) a-3, b-4, c-1, d-2 D) a-2, b-1, c-3, d-4

33. சுந்தர காண்டத்தில் காணலாகும் சருக்கங்கள்

A) 70 B) 66 C) 64 D) 71

34. பொருத்துக.

a. இருமொழி அகராதி – 1. வீரமாமுனிவர்

b. ஒருமொழி அகராதி – 2. சிதம்பரநாத செட்டியர்

c. வேர்ச்சொல் அகராதி – 3. பி.தங்கவேலு

d. பன்மொழி அகராதி – 4. எமனோ

A) a-2, b-1, c-4, d-3 B) a-3, b-2, c-1, d-4

C) a-4, b-2, c-3, d-1 D) a-2, b-1, c-3, d-4

35. ஆராய்ந்தெழுதுக.
1. தொகைநூல்களுள் முதலில் தொகுக்கப் பெற்ற நூல் குறுந்தொகை.
2. உரையாசிரியர்களால் மிகுதியாக எடுத்தாளப்பட்ட நூல் குறுந்தொகை
3. குறுந்தொகையில் கலிப்பா ஓசை இடம்பெற்றுள்ளது.
4. ஓரங்க நாடக அமைப்பு குறுந்தொகையின் சிறப்பு

A) 1, 3 சரி B) 1, 2 சரி C) 2, 3 சரி D) 2, 4 சரி

36. ஆராய்ந்தெழுதுக.
1. அளவடி என்பது நாற்சீரடி
2. சிந்தடி என்பது முச்சீரடி
3. குறளடி என்பது இருசீரடி
4. நெடிலடி என்பது ஆறுசீர் அடி

A) 1, 3 சரி B) 1, 2, 3 சரி C) 2, 4 சரி D) 2, 3, 4 சரி

37. க, ங என்பது

A) **கடைய**ண்ண ஒலி B) நாமடி ஒலி
C) பல்லின ஒலி D) இதழொலி

38. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. குறுந்தொகை | – | 1. | 13-31 அடிகள் |
| b. ஐங்குறுநூறு | – | 2. | 9-12 அடிகள் |
| c. அகநானூறு | – | 3. | 4-8 அடிகள் |
| d. நற்றிணை | – | 4. | 3-6 அடிகள் |

A) a-3, b-4, c-1, d-2 B) a-2, b-3, c-4, d-1
C) a-1, b-3, c-4, d-2 D) a-2, b-3, c-1, d- 4

39. கேரள பாணினீயத்தின் ஆசிரியர் யார்?

A) குஞ்சன் நம்பியார் B) எழுத்தச்சன்
C) பூந்தானம் D) A.R.ராஜராஜ வர்மா

40. பின்வருவனவற்றுள் நனவோடை உத்தியில் படைக்கப்பட்ட நாவல்

A) காஞ்சனையின் கனவு B) மோகமுள்
C) மரப்பசு D) வாடிவாசல்

41. ஆராய்ந்தெழுதுக.
1. பெங்கோ வடதிராவிட மொழியாகும்
2. தோடா தென்திராவிட மொழியாகும்
3. கோண்டி நடுதிராவிட மொழியாகும்
4. மால்தோ நடு திராவிட மொழியாகும்

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 1, 4 சரி D) 3, 4 சரி

42. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. இம்மை,மறுமை | – | 1. இல்வாழ்க்கை |
| b. விருந்தோம்பல் | – | 2. அறன் வலியுறுத்தல் |
| c. குழந்தைச் செல்வம் | – | 3. வான்சிறப்பு |
| d. மழை | – | 4. மக்கட்பேறு |

A) a-4, b-3, c-1, d-2 B) a-2, b-1, c-4, d-3
C) a- 3, b-1, c-4,d- 2 D) a- 3, b-1, c-2, d-4

43. .................. தவமிரண்டும் தங்காவியனுலகம்
வானம் வழங்காதெனின்

A) அறம் B) தானம் C) கொடை, D) அன்பு

44. ஆராய்ந்தெழுதுக

1. தோடுடைய செவியன் எனத் தொடங்கும் பாடலை அப்பர் பாடினார்.
2. ஞானசம்பந்தர் திருநெல்வாயில் அறத்துறை சென்றபோது இறைவனின் அருளால் முத்துப்பல்லக்கு முத்துக்குடை முத்துச்சின்னம் இவற்றை பெற்றார்.
3. ஆதிசங்கரர் திருஞானசம்பந்தரைத் திராவிட சிசு என்றழைத்தார்
4. திருஞானசம்பந்தர் 'திருநீற்று பதிகம் பாடினார்.

A) 1, 2 சரி B) 1, 3 சரி
C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

45. நாளும் கோளும் ஒன்றும் செய்யாது எனக் கோளறு பதிகத்தைப் பாடியவர் யார்?

A) சுந்தரர் B) அப்பா
C) ஞானசம்பந்தா D) மாணிக்கவாசகர்

46. நன்னூலார் தலைமாணாக்கரை பின்வருவனவற்றுள் எதனுடன் ஒப்பிடுகிறார்?

A) அன்னம் B) ஆடு C) கிளி D) கழுகு

47. கோலியாத்தின் இடி சொல்லுக்கும், மின் பல்லுக்கும் உவமையாக தேம்பாவணி சுட்டுவது எது?

A) கரியமேகம B) கரிய மலை C) வேங்கடமலை D) எரிமலை

48. பொருத்துக.

a. Concept – 1. கருத்தியல்
b. Historical criticism – 2. கருத்தாக்கம்
c. Ideology – 3. மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு
d. Evaluative Criticism – 4. வரலாற்றுமுறைத் திறனாய்வு

A) a-3,b-2,c-4,d-1 B) a-2,b-4,c-1,d-3
C) a-2,b-3,c-4,d-1 D) a-4,b-3,c-2,d-1

49. ஆராய்ந்தெழுதுக.

1. இலக்கியப் படைப்பின் தரத்தை மதிப்பீடு செய்வது முடிபுமுறைத் திறனாய்வு
2. இலக்கியங்களில் பொதிந்துள்ள பொதுதன்மையினைக் கண்டறிவது விளக்கமுறைத் திறனாய்வு
3. இலக்கியப்படைப்பை மற்றொரு இலக்கியப் படைப்போடு ஒப்பிடுவது ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு
4. கருதுகோள் என்பது ஒரு கருத்தை ஒட்டுமொத்த சிந்தனைக்கான முன்வரைவாக உருவகித்தல்.

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 3, 4 சரி D) 2, 4 சரி

50. "ஒப்பிலக்கிய அறிமுகம்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) தமிழண்ணல், B) க.கைலாசபதி,
C) அ.ச ஞானசம்பந்தன், D) கால்டுவெல்

51. இடைநா இடை அண்ணத்தைத் தொடப் பிறக்கும் ஒலிகள்

A) ட, ண B) க, ங C) ச, ஞ D) ப, ம

52. தொல்காப்பியர் சுட்டும் மெய்யெழுத்தின் மாத்திரை

A) கால்மாத்திரை, B) முக்கால் மாத்திரை,

C) அரை மாத்திரை, D) .இரண்டு மாத்திரை

53. மருதத்திணைக்குப் புறனான புறத்திணை எது?

A) காஞ்சி B) உழிஞை C) பாடாண் D) வாகை

54. பொருத்துக.

a. சு.தமிழ்ச்செல்வி – 1. குயில்பாட்டு

b. பாரதிதாசன் – 2. அளம்

c. பாரதியார் – 3. காலந்தோறும் பெண்

d. இராஜம் கிருஷ்ணன் – 4. தமிழச்சியின் கத்தி

A) a-4, b-1,c-3, d-2 B) a-2, b-4, c-1, d-3

C) a-2, b-3, c-4, d-1 D) a-4, b-3, c-1, d-2

55. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை எது?

A) துள்ளல் ஓசை B) .தூங்கல் ஓசை

C) அகவல் ஓசை D) செப்பலோசை

56. ஆராய்ந்தெழுதுக.

1. அப்துல்கலாம் தனது பள்ளிக்கல்வியை சென்னையில் முடித்தார்.
2. அக்கினி சிறகுகள் ஏவுகணையை மையமாகக் கொண்டது.
3. அப்துல்கலாமின் முழுப்பெயர் 31 ஆங்கில எழுத்துக்களைக் கொண்டது
4. சாராபாயின் நினைவாக VSSC பெயர் சூட்டப்பட்டது.

A) 1, 2 சரி B) 2, 3 சரி

C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

57. தலித்தியத் திறனாய்வாளராக போற்றப்படுபவர் யார்?

A) ராஜ்கௌதமன் B) கி.வா.ஜகந்நாதன்

C) க.நா.சு D) **வண்ணதாசன்**

58. மாற்றிலக்கணக் கோட்பாட்டை உருவாக்கியவர்

A) சுகுஸ்தா B) கால்டுவெல்

C) சோம்ஸ்கி D) நைடா

59. பொன்னன் என்பது ....................

A) குறிப்பு வினைமுற்று, B) வியங்கோள் வினைமுற்று,

C) தெரிநிலை வினைமுற்று, D) ஏவல் வினைமுற்று

60. திவாகர நிகண்டு எத்தனைத் தொகுதிகளைக் கொண்டது?

A) 14 B) 16 C) 18 D) 12

61. ஆராய்ந்தெழுதுக.
ஆராய்ச்சிக் கட்டுரை என்பது
1. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருளை விளக்குதல்.
2. முடிவுகளை விளக்குதல்
3. ஆராய்ச்சிக் கட்டுரையில் ஒப்பீட்டு முறை தேவையில்லை.
4. ஆய்வில் எதிர்படும் சிக்கலை விளக்குதல்.

A) 1, 2, 4 சரி B) 2, 3 சரி
C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

62. Surrealism என்பது
A) மிகை எதார்த்தவாதம் B) புனைவியல் வாதம்
C) .எதார்த்தவாதம் D) சீர்திருத்தவாதம்

63. ஆய்வைத் தொடர்ந்து செலுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த மூலம் எது?
A) ஆய்வு எல்லை B) கருதுகோள்
C) ஆய்வு ஆதாரங்கள் D) கள ஆய்வு

64. வரிசைப்படுத்துக.
1. எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
2. அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
3. நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு
4. அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே

A) 1,2,3,4 B) 2,3,4,1 C) 3,1,2,4 D) 4,3,1,2

65. 'Anthropologist' என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்
A) அரிஸ்டாட்டில் B) தார்வின்
C) ஹிப்போகிரட்டஸ் D) சாக்ரட்டீஸ்

66. பொருத்துக.
a. காளியின் வேடம் - 1. தேவராட்டம்
b. மாரியம்மன் - 2. காவடியாட்டம்
c. முருகன் - 3. கரகாட்டம்
d. சக்கமாதேவி - 4. சிம்ம ஆட்டம்

A) a-2, b-3, c-4, d-1 B) a-3, b-4, c-2, d-1
C) a-3, b-1, c-4, d-2 D) a-4, b-3, c-2, d-1

67. ஆராய்ந்தெழுதுக.
நிகண்டு என்பது
1. தமிழில் அகராதிகளுக்கு முன்னோடியாக இருந்தவை.
2. சூடாமணி நிகண்டை இயற்றியவர் மண்டல புருடர்.
3. உரிச்சொல் பனுவல் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
4. செய்யுள் வடிவில் அமைந்தவை

A) 1, 2 சரி B) 1, 3 சரி
C) 2, 3 சரி D) அனைத்தும் சரி

68. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | யானை | – | 1. கனைக்கும் |
| b. | சிங்கம் | – | 2. ஊளையிடும் |
| c. | நரி | – | 3. முழங்கும் |
| d. | குதிரை | – | 4. பிளிறும் |

A) a-2, b-3, c-4, d-1 B) a-3, b-4, c-2, d-1
C) a-3, b-1, c-4, d-2 D) a-4, b-3, c-2, d-1

69. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. பொய்கையாழ்வார் | – | 1. இரண்டாம் திருவந்தாதி |
| b. பூதத்தாழ்வார் | – | 2. முதல் திருவந்தாதி |
| c. பேயாழ்வார் | – | 3. திருவாய்மொழி |
| d. நம்மாழ்வார் | – | 4. மூன்றாந் திருவந்தாதி |

A) a- 2, b-1, c-4, d-3 B) a-3, b-4, c-2, d-1
C) a-3, b-1, c-4, d-2 D) a-4, b-3,c- 2, d-1

70. உழிஞைத்திணை எத்தனை துறைகளை உடையது?
A) 14 B) 15 C) 11 D) 12

71. வரிசைப்படுத்துக.
A) தேமா, கருவிளம், கூவிளம், புளிமா.
B) தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்.
C) கூவிளம், கருவிளம், தேமா, புளிமா.
D) கருவிளம், கூவிளம், தேமா, புளிமா.

72. சுதரிசன் சிங் என்னும் கதாப்பாத்திரம் இடம்பெறும் நூல் ..................
A) ஒரு மாமரமும் கொஞ்சம் பறவைகளும்
B) காலந்தோறும் பெண்
C) குயில்பாட்டு
D) தமிழச்சியின் கத்தி

73. ஆராய்ந்தெழுதுக.
1. ஆதி உலாவின் கதைத்தலைவன் முருகன்
2. அற்புதத் திருவந்தாதியை இயற்றியவர் காரைக்காலம்மையார்.
3. பரணி என்பது நட்சத்திரப் பெயர்
4. பள்ளு இலக்கியம் உழத்திப்பாட்டு என்றும் அழைக்கப்படுகிறது.

A) 1, 2 சரி, B) 2, 3, 4 சரி C) 3, 4 சரி D) 2, 3, சரி

74. உரிச்சொல் நிகண்டின் காலம் .................... ஆகும்
A) 9 ஆம் நூற்றாண்டு, B) 10 ஆம் நூற்றாண்டு,
C) 7 ஆம் நூற்றாண்டு, D) 14 ஆம் நூற்றாண்டு

75. ஆராய்ந்தெழுதுக.
யாப்பருங்கலக்காரிகை
1. தமிழ் இலக்கண நூல்களில் மிகவும் பழமையானதாகக் கருதப்படுகிறது.
2. இதன் ஆசிரியர் குணசாகரர்
3. கட்டளைக் கலித்துறை யாப்பு கொண்டு எழுதப்பட்டுள்ளது.
4. இந்நூல் இரண்டு இயல்களை உடையது.

A) 3,4 சரி B) 1,3 சரி C) 1,2,3 சரி D) 2,4 சரி

76. குறிஞ்சிப் பாட்டில் உள்ள மலர்களின் எண்ணிக்கை
A) 79 B) 69 C) 99 D) 89

77. மீனவர்களால் ஆடப்படும் ஆட்டம் எது?
A) புலியாட்டம், B) தேவராட்டம்,
C) கவடி ஆட்டம், D) பொடிக்கழி ஆட்டம்

78. ஆராய்ந்தெழுதுக.
1. ‘முதுமக்கள் தாழி தோட்டம்’100 ஏக்கர் பரப்புள்ள மேடாகும்.
2. ஆதிச்ச நல்லூர் என்னும் இடத்தில் காணப்படுகிறது.
3. பிணைக்குழிகளில் ஆயுதங்கள் காணக்கிடைக்கின்றன.
4. இந்த நினைவுச் சின்னங்கள் திருச்சூரில் கிடைத்த நினைவுச் சின்னத்துடன் ஒத்துபோகின்றன.

A) 1,3சரி B) 3,4சரி C) 1,2,4சரி D) 2,3சரி

79. பெண்ணியம் தோன்றிய காலகட்டம் எது?
A) 18 ஆம் நூற்றாண்டு, B) 19 ஆம் நூற்றாண்டு,
C) 20 ஆம் நூற்றாண்டு, D) 21 ஆம் நூற்றாண்டு

80. சுந்தரகாண்டம் காட்டும் சொல்லின் செல்வன்
A) இராவணன் B) விபீடணன் C) இராமன் D) அனுமன்

81. குமரகுருபரர் பாடிய பிள்ளைத்தமிழ் நூல்
A) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
B) குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
C) .சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
D) திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்

82. ‘ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப” – எவ்வகை இலக்கியம்?
A) பரணி B) குறவஞ்சி
C) உலா D) பிள்ளைத்தமிழ்

83. நீராரும் கடலுடுத்த’ எனத்தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெறும் நூல்
A) மனோன்மணீயம் B) திருவள்ளுவமாலை
C) பாஞ்சாலி சபதம் D) தமிழ்விடுதூது

84. இன்பவெள்ளம் என்பது
A) உவமையணி B) தன்மையணி
C) வேற்றுமையணி D) உருவகயணி

85. கீழ்க்காணும் பாடல் வரிகளை வரிசைப்படுத்துக.
1. அருந்ததிக் கற்பினார் தோளும், திருந்திய
2. திரிகடுகம் போலும் மருந்து
3. அரில் அகற்றும் கேள்வியார் நட்பும் - இம்மூன்றும்
4. தொல்குடியில் மாண்டார் தொடர்ச்சியும், சொல்லின்

A) 1,4,3,2 B) 3,4,1,2 C) 1,2,4,3 D) 2,3,4,1

86. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதியவர்?
A) ஆறுமுகநாவலர் B) இளம்பூரணர்
C) பனம்பாரனார் D) நச்சினார்கினியர்

87. தாய்மொழிப் பத்திரிகைச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்
A) லிட்டன் பிரபு B) கர்ஸன் பிரபு
C) வெல்லிங்டன் பிரபு D) மின்டோ பிரபு

88. ‘வீணபூவு’ என்ற குமாரனாசானின் மலையாள காவியம் தமிழில் எந்த பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?
A) உதிர்ந்தமலர் B) வீழ்ந்தமலர்
C) காய்ந்தமலர் D) விழுந்தமலர்

89. டச்சு ஐக்கியக் கம்பெனி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு?
A) கி.பி 1603 B) கி.பி 1604 C) கி.பி.1608 D) கி.பி.1602

90. உலகிலுள்ள பெரும்பான்மையானத் தமிழ்ச்சுவடிகளுக்கு அகராதி தயாரித்து வெளியிட்ட பல்கலைக்கழகம் எது?
A) தமிழ்ப் பல்கலைக்கழகம், B) அழகப்பா பல்கலைக்கழகம்,
C) திராவிடப் பல்கலைக்கழகம், D) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

91. அடிமுறையை வரிசைப்படுத்துக.
A) குறளடி, சிந்தடி, நெடிலடி, அளவடி
B) குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி
C) சிந்தடி, குறளடி, நெடிலடி, அளவடி
D) சிந்தடி, நெடிலடி, அளவடி, குறளடி

92. நெடுநல்வாடையின் ஆசிரியர்
A) நக்கீரர் B) கபிலர்
C) மாங்குடிகிழார் D) கூடலூர்கிழார்

93. திணை அடிப்படையில் வரிசைப்படுத்துக
A) சேயோன், மாயோன், வருணன், வேந்தன்
B) வருணன், வேந்தன், சேயோன், மாயோன்
C) மாயோன், சேயோன், வேந்தன், வருணன்
D) மாயோன், சேயோன், வருணன், வேந்தன்

94. இந்திய மானிடவியலின் தந்தை எனப் போற்றப்படுபவர்?
A) சரத்சந்திர ராய் B) மஜீம்தார்
C) குர்யே D) பக்தவத்ஸல பாரதி

95. ‘திராவிடம்’ என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்

A) குமரிலபட்டர், B) கால்டுவெல்

C) ரிச்சர்ட்ஸ் D) அரிஸ்டாட்டில்

96. அக்னிச் சிறகுகள் எவ்வகை நூல்?

A) ஆய்வு நூல் B) சுயசரிதம்

C) வரலாற்று நூல D) அறிவியல் நூல்

97. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளில் எழுவாய் வடிவத்தை வரிசைப்படுத்துக.

A) ஞான், நான், ஆன், நேனு

B) ஆன், ஞான், நான், நேனு

C) நான், ஆன், ஞான், நேனு

D) நான், ஞான், ஆன், நேனு

98. ஆராய்ந்தெழுதுக.

1. கூகை அலறினால் சாவு வரும்
2. தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும்.
3. காகம் கரைந்தால் விருந்தினர் வருவர்
4. சுப காரியங்கள் பேசும் போது விளக்கு அணைந்தால் நல்ல சகுனம்

A) 1,2சரி B) 1,3சரி C) 2,3,4சரி D) 1,2,3 சரி

99. கிரியைகள், வேள்விகள் பற்றி கூறும் வேதம் எது?

A) ரிக் B) யசூர் C) சாம D) அதர்வணம்

100. பெருத்துக.

a. டிரான்சிஸ்டர் – 1. முதல் தலைமுறை கணினிகள்

b. மைக்ரோ புரோஸர் – 2. இரண்டாம் தலைமுறை கணினிகள்

c. இன்டகிரேட்டட் சர்க்கியூட்ஸ் I.C – 3. மூன்றாம் தலைமுறை கணினிகள்

d. வெற்றுக்குழாய் – 4. நான்காம் தலைமுறை கணினிகள்

A) a-3, b-2, c-4, d-1 B) a-2, b-4, c-3, d-1

C) a-1, b-4, c-3, d-2 D) a-2, b-3, c-1, d-4

101. மூங்கில் மேல் நடந்து சென்று நடத்தப்படும் கூத்து

A) கழைக்கூத்து, B) தெருக்கூத்து,

C) மரப்பாவைக்கூத்து, D) தோற்பாவைக்கூத்து

102. ‘Online’ என்பதன் தமிழாக்கம் என்ன?

A) முடக்கலை B) ஊடலை C) இயங்கலை D) நேரலை

103. ஆராய்ந்தெழுதுக.

1. பதிற்றுப்பத்து சேரமன்னர்களைப் பற்றி விளக்கும் நூல்
2. கடைசிப்பத்து கிடைக்கவில்லை.
3. ஆறாம் பத்தைப் பாடியவர் காக்கைப் பாடினியார்
4. மூன்றாம் பத்து செல்கெழுகுட்டுவன் மீது பாடப்பட்டது.

A) 1, 4 சரி B) 1, 3, 4 சரி C) 1, 2, 3 சரி D) அனைத்தும் சரி

104. பொருத்துக.

a. ஆசிய ஜோதி - 1. Poetics
b. அழகின் சிரிப்பு - 2 Light of Asia
c. சொர்க்க நீக்கம் - 3. Paradise Lost
d. கவிதையியல் - 4. Smile of Beauty

A) a-3, b-2,c-4,d-1 B) a-2, b-4,c-3,d-1
C) a-4, b-1,c-3,d-2 D) a-1, b-3,c-4,d-2

105. குட்டித்தொல்காப்பியம் என்றழைக்கப்படும் நூல் எது?

A) நன்னூல் B) வீரசோழியம்
C) தொன்னூல் விளக்கம் D) வேத விளக்கம்

106. வரிசைப்படுத்துக.

A) காட்சிப்படலம், ஊர்தேடு படலம், கடல்தாவு படலம், உருக்காட்டு படலம்
B) ஊர்தேடு படலம், கடல்தாவு படலம், உருக்காட்டு படலம், காட்சிப்படலம்
C) கடல்தாவு படலம், உருக்காட்டு படலம், காட்சிப்படலம், ஊர்தேடு படலம்
D) கடல்தாவு படலம், ஊர்தேடு படலம், காட்சிப்படலம், உருக்காட்டு படலம்

107. ஆராய்ந்தெழுதுக.

1. சீறாப்புராணம் எழுத உமறுப்புலவருக்கு உதவியவர் வள்ளல் சீதக்காதி
2. சீறாப்புராணம் முற்றுப்பெற வள்ளல் அபுல்காசிம் மரைக்காயர் உதவினார்.
3. சீறா என்பதன் பொருள் வாழ்க்கை
4. இந்நூல் இரண்டு காண்டங்களை உடையது

A) 1, 3 சரி B) 2, 3 சரி C) 1, 2, 3 சரி D) 1, 2, 4 சரி

108. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ............

A) **காக்கை பாடினியார்** B) ஆண்டாள்
C) **ஔவையார்** D) கரைக்கால் அம்மையார்

109. கோவை நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்த சங்க இலக்கிய நூல் எது?

A) குறிஞ்சிப்பாட்டு B) முல்லைப்பாட்டு
C) மலைபடுகடாம், D) .நெடுநல்வாடை

110. ‘நாடக இயல்’ என்னும் நூலின் ஆசிரியர் பெயர்

A) ர.வேங்கடாசலம் B) சூரியநாராயண சாஸ்திரியார்
C) ராமானுஜம் D) சங்கரதாஸ் சுவாமிகள்

111. ஆராய்ந்தெழுதுக.

தண்டியலங்காரம் என்பது

1. தமிழில் ஐவகை இலக்கணத்தை **விளக்கும் நூல்**.
2. இந்நூலின் ஆசிரியர் தண்டி
3. காவியம் என்னும் வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்டது.
4. நான்கு பிரிவுகளை உடையது.

A) 1,2 சரி B) 2,3 சரி C) 3,4 சரி D) 1,4 சரி

112. யவனரின் பாவை விளக்கு பற்றிக் குறிப்பிடும் நூல்?

A) நெடுநல்வாடை B) கலித்தொகை
C) தொல்காப்பியம் D) குறுந்தொகை

113. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தோடு எல்லா அடிகளும் அளவடிகளாய் வருவது
A) நிலைமண்டில ஆசிரியப்பா B) நேரிசையாசிரியப்பா
C) இணைகுறளாசிரியப்பா, D) அடிமறிமண்டில ஆசிரியப்பா

114. ஆராய்ந்தெழுதுக.
ஒலியியல் என்பது
1. மொழியின் ஒரு துணைப்பிரிவு
2. ஒலிகளைப்பற்றி ஆய்வு செய்யும் அறிவியல் துறை
3. வாகனங்களிலிருந்து வெளிவரும் ஒலியின் அளவைக் கட்டுபடுத்துவது
4. ஒலிப்பெருக்கியின் அளவைக் கட்டுப்படுத்துவது

A) 1,2 சரி B) 2,3 சரி C) 3,4 சரி D) 1,4 சரி

115. ஒவ்வொரு பாடலின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு எனக் குறிப்பு காணப்படும் நூல்
A) நெடுநல்வாடை, B) பதிற்றுப்பத்து,
C) குறுந்தொகை, D) குறிஞ்சிப்பாட்டு

116. முத்துப்பல் என்பதில் எந்த அணி இடம்பெற்றுள்ளது?
A) பண்பு உவமையணி B) தொழில் உவமையணி
C) பயன் உவமையணி D) தொகை உவமையணி

117. பொருத்துக.
a. ஒலியியல் - 1. Morphology
b. ஒலியனியல் - 2. Phonetics
c. உருபனியல் - 3. Phonology
d. தொடரியல் - 4. Syntax

A) a-3, b-2, c-4, d-1 B) a-2, b-3, c-1, d-4
C) a-4, b-1, c-3, d-2 D) a-1, b-3, c-4, d-2

118. தமிழ்நாட்டில் அகழ்வாராய்சி நடைபெற்ற இடம்
A) அரிக்கமேடு B) மசூலிப்பட்டணம்
C) சென்னை D) நாகப்பட்டினம்

119. பொருத்துக.
a. பள்ளிக்குச் சென்றான் – 1. இரண்டாம் வேற்றுமை
b. மஞ்சளது பொடி – 2. மூன்றாம் வேற்றுமை
c. மரத்தை நட்டான் – 3. நான்காம் வேற்றுமை
d. ஊசியால் தைத்தான் – 4. ஆறாம் வேற்றுமை

A) a-3, b-2, c-4, d-1 B) a-2, b-3, c-1, d-4
C) a-3, b-4, c-1, d-2 D) a-1, b-3, c-4, d-2

120. மலையாள முப்பெருங் கவிஞர்களில் ஒருவர்
A) வள்ளத்தோள், B) கேரள வர்மா,
C) எழுத்தச்சன், D) உண்ணாயி வாரியர்